## 2.14 முன்னுரிமைப் பணிகள் – நகரப் பகுதிகளை உள்ளடக்கிய தொகுதிகளிலும் முன்னுரிமை பணிகள் செயல்படுத்துதல் மற்றும் இதரப் பணிகளுக்கான ஒதுக்கீடு

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.116 நாள் : 18.08.2005

படிக்க :

1) அரசாணை(நிலை) எண்.75, ஊரக வளர்ச்சித் துறை நாள்.19.06.2002
2) அரசாணை(நிலை) எண்.120, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.29.07.2004
3) அரசாணை (நிலை) எண்.59, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.03.05.2005
4) ஊரக வளர்ச்சி இயக்குநர் ந.க.எண்.23954/2005/மாதி4 நாள்.22.04.2005
5) ஊரக வளர்ச்சி இயக்குநரின் ந.க.எண்.45024/05/மாதி4 நாள்.15.06.2005

**ஆ ணை**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம் குறித்து ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் தொகுக்கப்பட் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட முன்னுரிமைப் பணிகள் மற்றும் இதரப் பணிகளுக்கான நிதி ஒதுக்கத்தினை 2005–06ம் ஆண்டுக்கு கீழ்கண்டவாறு பகிர்ந்தளித்து, பார்வை மூன்றில் படிக்கப்பட்ட ஆணையில் அரசு ஆணையிட்டுள்ளது.–

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| குடிநீர்ப் பணிகள் | 5.00 |
| நமது கிராமம் திட்டம் | 10.00 |
| மாணவர் இல்லங்கள் கட்டுதல் | 5.00 |
| கிராம ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள் அமைக்க | 10.00 |
| தெருவிளக்குகள் | 5.00 |
| தொகுப்பு வீடுகள் பழுது பார்க்க | 25.00 |
| இதரப் பணிகளுக்கு | 40.00 |
| மொத்தம் | 100.00 |

இதில், தொகுப்பு வீடுகள் பழுது பார்க்கும் பணிகளைச் செயல்படுத்துவதற்கான விரிவான வழிமுறைகளை (Guidelines) வெளியிட ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரமளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நான்கு மற்றும் ஐந்தில் படிக்கப்பட் கடிதங்களில், கிராமப் பகுதிகளுக்கான திட்டங்கள் ஏதும் செயல்படுத்த இயலாத மாநகராட்சி, நகராட்சி ஆகிய பகுதிகளை மட்டுமே கொண்ட சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில், முன்னுரிமை மற்றும் இதரப் பணிகளுக்கென ஒதுக்கீட்டின் கீழ் பின்வரும் பணிகளை மேற்கொள்ள அனுமதி அளிக்குமாறு அரசை வேண்டியுள்ளார்.

அ) முன்னுரிமைப் பணிகளின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நமது கிராமம், கிராம ஊராட்சிகளுக்கு சிமெண்ட் சாலைகள் அமைத்தல், தொகுப்புவீடுகள் பழுது பார்த்தல் போன்ற பணிகள் மாநகராட்சி மற்றும் நகர்ப்புற எல்லைக்குட்பட்ட இடங்களில் மேற்கொள்ள இயலாது.எனவே, இவ்வினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியான ரூ.10+10+25=ரூ.45.00 இலட்சங்களை மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கலாம் என ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

1. குடிசைப் பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி.
2. குடிசைப் பகுதிகள் / குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கு செப்பனிட தலா ஒவ்வொரு குடியிருப்புக்கும் ரூ.10000/–க்கு மிகாமல் செப்பனிடும் பணி.

3. குடிசைப் பகுதிகளுக்கு தேவையான குடிநீர்ப் பணிகள் / தெருவிளக்குப் பணிகள்

4. அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி கட்டிடங்கள் கட்டுதல் மேம்படுத்துதல் மற்றும் பழுது பார்த்தல், (மருத்துவக் கல்லூரி அலுவலர்கள் குடியிருப்பு / மாணவர் இல்லங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படக்கூடாது)

5. அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு நிலையான கருவிகள் (M.R.I ஸ்கேன் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த கருவிகள்) வாங்குதல்.

6. பொதுக்கழிப்பிடங்கள் கட்டுதல்.

7. அரசுப் பள்ளிக் கட்டிடம் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்.

8. அரசுப் பள்ளிகளில் புதிய சத்துணவுக் கூடம் / புதிய சமையற்கூடம் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்.

9. அரசு சமுதாயக் கூடம் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்.

ஆ) மாணவர் இல்லங்கள் கட்டும் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.5.00 இலட்சத்தை மாநகராட்சி மற்றும் நகர்ப்புற எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ள இயலாத பட்சத்தில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள அரசு மாணவர் இல்லங்களை மேம்பாடு செய்யவும் பழுது பார்க்கவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இ) முன்னுரிமை அல்லாத இதரப் பணிகள்.

அ) கால்நடை மருத்துவமனை/ துணை மருத்துவமனைக் கட்டிடம் கட்டுதல்.

ஆ) எரிசக்திக் கருவிகளான SPV. தெருவிளக்குகள், காற்றாலை, SPV குடிநீர் விசைக் குழாய் போன்றவற்றை தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் அங்கீகரித்துள்ள நிறுவனங்களிடமிருந்து வாங்குதல்.

இ) நியாயவிலைக் கடைகள் கட்டுதல்.

ஈ) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டிடங்கள் கட்டுதல், (இதரப் பணிகள் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளுதல்.)

உ) கிராமப் புறங்களில் பேருந்து நிழற்குடைகளை ரூ.50,000/– மதிப்பீட்டுக்கு மிகாமல் கட்ட அனுமதித்தல்.

ஊ) தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள பயனாளிகள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளுதல்.

4. மேலே பத்தி 3ல் உள்ள ஊரக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பை நன்கு பரிசீலித்த பின்னர், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நகர பகுதிகளை உள்ளடக்கிய தொகுதிகளிலும் செயல்படுத்த முன்னுரிமை பணிகளில் மாற்றம் செய்யவும் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளில் கீழ்க்கண்ட பணிகளை கூடுதலாக சேர்த்துக் கொள்ளவும் அனுதித்து அரசு ஆணையிடுகிறது.

அ) முன்னுரிமைப் பணிகள்.

முன்னுரிமைப் பணிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நமது கிராமம், கிராம ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள் அமைத்தல், தொகுப்பு வீடுகள் பழுது பார்த்தல் போன்ற பணிகள் மாநகராட்சி மற்றும் நகர்ப்புறங்களை மட்டுமே கொண்ட தொகுதிகளில் மேற்கொள்ள இயலாது. எனவே, இவ்வினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியான ரூ.10+10+25=ரூ.45.00 இலட்சங்களை மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளை மட்டுமே கொண்ட சட்டமன்றத் தொகுதிகளில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ளலாம்.

1. குடிசைப் பகுதிகளில் / குடிசை மாற்று வாரிய குடியிருப்புப் பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி.

2. குடிசைப் பகுதிகள் / குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை செப்பனிட தலா ஒவ்வொரு குடியிருப்புக்கும் ரூ.10000/–க்கு மிகாமல் செப்பனிடும் பணி.

3. குடிசை/குடிசை மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதிகளுக்கு தேவையான குடிநீர்ப் பணிகள் / தெருவிளக்குப் பணிகள்.

4. அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி கட்டிடங்கள் கட்டுதல் மேம்படுத்துதல் மற்றும் பழுது பார்த்தல் மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர் இல்லங்கள் கட்டுதல்.
5. அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு நிலையான கருவிகள் (MRI ஸ்கேன் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த கருவிகள்) வாங்குதல்.
6. பொதுக்கழிப்பிடங்கள் கட்டுதல்.
7. மாநகராட்சி / நகராட்சி / அரசு பராமரிப்பில் உள்ள பள்ளிக் கட்டிடம் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்.
8. மாநகராட்சி / நகராட்சி / அரசு பராமரிப்பில் உள்ள பள்ளிகளில் புதிய சத்துணவுக் கூடம் / புதிய சமையற் கூடம் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்.
9. மாநகராட்சி / நகராட்சி / அரசுப் பராமரிப்பில் உள்ள சமுதாயக் கூடம் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல்.
10. மாணவர் இல்லங்கள் கட்டும் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.5.00 இலட்சத்தை மாநகராட்சி மற்றும் நகர்ப்புற எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ள இயலாத பட்சத்தில் ஏற்கனவே கட்டப்பட்டுள் அரசு மாணவர் இல்லங்களை மேம்பாடு செய்யவும் பழுது பார்க்கவும் பயன்படுத்திக் கொள்ளுதல்.

ஆ) இதர பணிகளுக்கான ஒதுக்கீடு.

இதர பணிகளுக்கான ஒதுக்கீட்டில் கீழ்கண்ட பணிகளை இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளலாம்.

1. கால்நடை மருத்துவமனை/ துணை மருத்துவமனைக் கட்டிடம் கட்டுதல்.
2. எரிசக்திக் கருவிகளான SPV தெருவிளக்குகள், காற்றாலை, SPV குடிநீர் விசைக் குழாய் போன்றவற்றை தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் அங்கீகரித்துள்ள நிறுவனங்களிடமிருந்து வாங்குதல்.
3. பொது விநியோகக் கடைகள் கட்டுதல்.
4. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டிடங்கள் கட்டுதல்,
5. கிராமப் புறங்களில் பேருந்து நிழற்குடைகளை ரூ.50,000/– மதிப்பீட்டுக்கு மிகாமல் கட்ட அனுமதித்தல்.
6. தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள பயனாளிகள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளுதல்.

5. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.59975/RD/2005–01/ நாள்.17.08.2005ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்